**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 118 / 2023**

**வா.சா.1 – சரோஜா** **20.08.2025**

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வம்சா வழி பட்டியல் மற்றும் வா.சா.ஆ.2 வாரிசு சான்றிழும் எனது உடன் பிறந்த சகோதரர் கிருஷ்ணனையும் உடன் பிறந்த சகோதரி யசோதையையும் காட்டவில்லை என்றால் சரிதான். மேற்படி எனது சகோதரர் கிருஷ்ணனையும் சகோதரி யசோதையையும் மறைத்து வா.சா.ஆ.2 வாரிசு சான்று பெற்றுள்ளதால் மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது அப்பா சூரியகண்ணு 1999ல் இறந்துபோனார். எனது அப்பா உயிருடன் இருந்த போது 10.04.1997ல் 5 லக்க சொத்துக்களை பொறுத்து எனக்கும் 2, 3 வாதிகளுக்கும் சேர்த்து ஒரு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா தானமாக எழுதிக் கொடுத்த மேற்படி ஆவணத்தில் கண்ட 1வது லக்க சொத்தை பொறுத்து நானும் 2, 3 வாதிகளும் 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து ராஜேஸ்கண்ணன் என்பவருக்கு 28.02.2019ல் பதிவு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 28.02.2019 மேற்படி கிரைய பத்திரம் சான்றிட்ட நகலில் உள்ள சரோஜா என்ற கையொப்பம் என்னுடையது தான். <u>அந்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகலில் உள்ள கையொப்பம் பி.வா.சா.ஆ.1.</u> எனது அப்பா அவரது பாகத்திற்கு கிடைத்த 5 லக்க சொத்தை எங்களுக்கு தானமாக எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். எனது அப்பா உயிருடன் இருந்த போதே சொத்துக்கள் பாகம் பிரித்து கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அப்படி பாகத்தில் கிடைத்த சொத்தை தான் எனது அப்பா தானமாக எழுதி

கொடுத்தார். அதே பாகத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அண்ணன் கிருஷ்ணன் என்பவரின் மனைவி நான் தான் என மீனாட்சி என்பவர் பிரஸ்தாபித்து மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.95/2003 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றும் அதில் 02.09.2005ல் தீர்ப்பு பகரப்பட்டது என்றும் அந்த தீர்ப்பில் தாவா சொத்துக்களை பொறுத்து 11.12.1994லேயே பாகப்பிரிவினை நடந்து முடிந்தது என்றும் அவரவருக்கு கிடைத்த பாகத்தை அவரவர் அனுபவம் செய்து வருகின்றனர் என்றும் எனது தம்பி நல்லதம்பிக்கு கிடைத்த பாகத்தை 3, 4 பிரதிவாதிகளுக்கு 04.01.1995 ல் பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தான செட்டில்மெண்ட்டின் அடிப்படையில் 3, 4 பிரதிவாதிகள் சுவாதீனம் பெற்று அரசுக்கு செலுத்த வேண்டிய வரி வகையறாக்களை செலுத்தி இன்றுவரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருந்த போது 1ம் பிரதிவாதி சந்தானத்திற்கு கொடுத்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை படித்தும் கேட்டும் தெரிந்து கொள்ளவில்லை. தாவா 3வது லக்க சொத்தை 3, 4 பிரதிவாதிகள் அனுபவம் செய்வதை இடையூறு செய்யக்கூடாது என 3, 4 பிரதிவாதிகள் திருப்புவனம் மாவட்ட உரிமையியல் நிதிமன்றத்தில் அ.வ.எண்.41/2019 தாக்கல் செய்து அந்த வழக்கில் 3, 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது. லாடனேந்தலில் உள்ள எங்களது பூர்வீக வீட்டை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு எனது அப்பா 30 பவுன் தங்க நகை போட்டார். அதுபோல எனது சகோதரிகளுக்கும் தங்க நகை போட்டார் என்றால் சரிதான். அதுபோல சாதி வழக்கப்படி செய்ய வேண்டிய சீர் சீராட்டுகளை எனது அப்பா நல்ல முறையில் செய்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சந்தனம் அவரது பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களை பல்வேலு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி சந்தனம் சொத்துக்களை விற்பனை செய்த வகையில் எங்களுக்கும் பணம் கொடுத்தார். இந்த வழக்கை 5 இலக்க சொத்துக்களுக்கு போட்டுள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்துக்களின் நான்குமால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா 1வது லக்க சொத்தின் 1 செண்ட் சுமார் 4 முதல் 5 லட்சம் வரை மதிப்பு இருக்கும். அது போல 2 முதல் 5 லக்க சொத்துக்களும் பல லட்சங்கள் மதிப்பு இருக்கும். தாவா சொத்துக்களை நாங்களும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்வது வருவதாக சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு 04.01.1995 அன்று எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எங்களுக்கு சட்டப்படி யாதொரு பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிராது தேதியில் நாங்கள் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு உரிமை விலக்கல் கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவசிய

கட்சிக்காரர்களை சேர்க்காத தோசத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அனைத்து சொத்துக்களையும் சேர்க்காததால் இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டின்படி பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :-**

04.01.1995ல் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை 2ம் பிரதிவாதி பதிவு செய்தபோது எனது தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தந்தைக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக 04.01.1995ல் தான செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்த போது எனது தந்தை 6ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காலம்கடந்து 04.01.1995 தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணம் இல்லா நிலையது என பரிகாரம் கோரியுள்ளதால் இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி சட்ட விதிகளுக்கு உட்பட்டு தான் பத்திரம் பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை